# <u>தமிழ்நாடு அரசு</u>

சுருக்கம்


நெடுஞ்சாலைகள் – திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு கோட்டங்களில் உள்ள சில சாலைப் பணிகளை செயல்படுத்திட ஹட்கோ நிறுவனம் (HUDCO) மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள் கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்திடம் (TUFIDCO) நிதி உதவி பெறுதல் – நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.


---

நெடுஞ்சாலைத் (எச்.க்யூ.1) துறை

அரசாணை (நிலை) எண்.1 நாள்: 02/01/2003

படிக்கவும்:

1) அரசாணை (நிலை) எண்.7, நெடுஞ்சாலைத் துறை, நாள் 12/01/2001.

<u>மீண்டும் படிக்கவும்:</u>

2) தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை, கடிதம் எண்.31969/சாலை 1/2001, நாள் 26/03/2002.

3) தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை கடிதம் எண்.51266/சாலை 2/2002, நாள் 28/11/2002 மற்றும் 06/12/2002.

4) அரசு கடிதம் எண்.6564/எச்க்யூ.1/2002–7 மற்றும் 8, நெடுஞ்சாலைத் துறை, நாள் 05/12/2002.

** * **

<u>ஆணை:</u>–

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 60 பாலப் பணிகள் மற்றும் 18 சாலைப் பணிகளை மேம்பாடு செய்வதற்கு முறையே ரூ.60.00 கோடியும் மற்றும் ரூ.15.00 கோடியும் ஆக மொத்தம் ரூ.75.00 கோடியினை ஹட்கோ நிதி உதவி பெற்று செயல்படுத்திட நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணையிடப்படுகிறது.

2. 60 பாலப் பணிகளில் சில பாலப் பணிகளில் நில எடுப்புப் பணி இருப்பதால், அவைகளை நீக்கி, அதற்குப் பதிலாக வேறு சில பாலப் பணிகளை மேற்கொள்வதற்கு தலைமைப் பொறியாளர் (திட்டம் 2) அவர்களால் நடவடிக்கை தனியாக எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், 18 சாலைப் பணிகளில், 7 சாலைப் பணிகள் வேறு திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளதால், மீதமுள்ள 11 சாலைப் பணிகளுக்கு திட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ.11.9908 கோடி செலவில் ஹட்கோ நிதி உதவி திட்டத்தின் மூலம் செயல்படுத்தலாம் என தலைமைப் பொறியாளர் (பொது) தெரிவித்தார்.

3. இந்நிலையில், 12/11/2002 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற வெள்ள நிவாரண ஆய்வுக் கூட்டத்தில், போரூர், மடிப்பாக்கம், வேளச்சேரி மற்றும் ஜி.எஸ்.டி. சாலைகளை ரூ.12.00 கோடி செலவில் மேம்படுத்தலாம் என முடிவெடுக்கப்பட்டது. அதனடிப்படையில், கீழ்க்கண்டுள்ள பணிகளை மேற்கொள்ள தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.

| திருவள்ளூர் கோட்டம் | | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| அ) | மர்மலாங்பாலம் – இரும்புலியூர் சாலை கிமீ. 5/0 – 6/3 பகுதிகளை மேம்படுத்துதல் மற்றும் கிமீ. 6/3 – 8/2 பகுதிகளை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல். | 300 |
| ஆ) | மவுண்ட் – மடிப்பாக்கம் சாலை – ஆலந்தூரில் கிமீ. 0/0 – 2/0 பகுதிகள் மற்றும் மவுண்ட் – மடிப்பாக்கம் சாலை கிமீ. 1/6 – 5/2 (இரண்டு வழி) பலப்படுத்துதல். | 200 |
| இ) | பல்லாவரம் – துரைப்பாக்கம் சாலை கிமீ. 7/0 – 9/0ல் நான்கு சிறு பாலங்கள் அமைத்தல். | 84 |
| | **மொத்தம்** | **584** |

| செங்கல்பட்டு கோட்டம் | | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| ஈ) | சட்ராஸ் சூரப்பன் – புதுப்பட்டினம் சாலையில் கிமீ. 11/8ல் பிரிந்து விட்டலாபுரம் செல்லும் சாலையில் கிமீ. 0/0 – 17/0ல் பகுதிகள் அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல். | 391 |
| உ) | நெரும்பூர் – புதுப்பட்டினம் சாலை கிமீ. 0/0 – 9/0 பகுதிகளை அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல் | 225 |
| | **மொத்தம்** | **616** |

4. தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை அவர்களின் செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டது. அதில், திருவள்ளூர் கோட்டத்தில் எடுத்துக் கொள்ள கருதப்பட்டுள்ள பணிக்கான திட்ட செலவினமான ரூ.5.84 கோடியை பெருநகர திட்டத்தின் கீழ் (MEGA CITY PROGRAMME) தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்திடம் (TUFIDCO) நிதியுதவி பெற்று செயல்படுத்தலாம் என்றும், செங்கல்பட்டு கோட்டத்தில் எடுத்துக்கொள்ள கருதப்பட்டுள்ள பணிகளுக்கான திட்ட செலவினமான ரூ.6.16 கோடியை ஹட்கோ (HUDCO) நிறுவனத்திடமிருந்து மாநில அரசின் நேரடி கடன் மூலம் நிதியுதவி பெற்று செயல்படுத்தலாம் என்றும் கருதப்பட்டுள்ளது.

5. மேலே கூறப்பட்டுள்ள சூழ்நிலையில், தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை அவர்களின் செயற்குறிப்பை ஏற்று, அரசாணை (நிலை) எண்.7, நெடுஞ்சாலைத் துறை, நாள் 12/01/2001ல் வெளியிடப்பட்டுள்ள ஆணைக்கு சிறிது மாற்றம் செய்து, மேலே பத்தி 3ல் குறிப்பிடப்பட்ட திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு கோட்டங்களில் உள்ள சில சாலைகளை மேம்பாடு செய்தல் மற்றும் சிறு பாலங்கள் கட்டும் பணிகளுக்கு ரூ.12.00 கோடிக்கு (ரூபாய் பன்னிரெண்டு கோடி மட்டும்) நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் அனுமதித்துள்ள செலவினங்களில், ரூ.5.84 கோடியை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்திடமும் (TUFIDCO) மற்றும் 6.16 கோடியை ஹட்கோ (HUDCO) நிறுவனத்திடமிருந்தும் பெற்று செயல்படுத்திடுமாறு தலைமைப் பொறியார் (பொது) கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணையானது நிதித் துறையின் அ.சா.கு.எண்.450/SS(LK)/02, நாள் 02/01/2003 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அ. நாகராஜன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

தலைமைப் பொறியாளர் (பொது) நெடுஞ்சாலைத் துறை, சென்னை – 5.
நிதித் துறை, சென்னை – 9.
மாநில கணக்காயர், சென்னை – 18 / 35.
நகல்: மாண்புமிகு அமைச்சர் (பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்) அலுவலகம், சென்னை – 9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
நெடுஞ்சாலைத் (அ.ந.மு.) துறை, சென்னை – 9.
அரசாணை (நிலை) எண்.7, நெடுஞ்சாலைத் துறை, நாள் 12/01/2001.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.